**கவனிக்க.**–2019.05.31 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2127 - 2019 ජූනි මස 07 වැනි සිකුරාදා - 2019.06.07

*2127 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | *1342* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1347* |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூன் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*1339-B 81529-5,403 (2019/05)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

*1.* **வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

***2. சேவை நிபந்தனைகள் : பொது***

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

***5. யுத்த சேவைச் சலுகை :***

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

***6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :***

*6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

***7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :***

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

***8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :***

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லூப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லூமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லூமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லூத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லூத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லூவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லூ விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலூல் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

### கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் சார்ந்த அலுவலர் சேவைத் தொகையின் சட்ட உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளல் - 2019

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் சார்ந்த அலுவலர் சேவைத் தொகையின் சட்ட உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு, அதாவது 2019.06.28 ஆந் திகதிக்கு முன்னர், இங்கு 2 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **சேவை நிபந்தனைகள்.**- இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களின் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளல் இடம்பெறும்.

1.1 இந்தப் பதவிக்கான நியமனத்தை நடைமுறைப்படுத்தும் திகதி, நியமனத்துக்குப் பொறுப்பாளரான கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

1.2 இங்கு அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட இந்த அறிவித்தலின் 5 ஆவது பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்ட புள்ளிகள் வழங்கும் விதிமுறைகளுக்கு அமைவாக தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கு இந்த நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **தகைமை**

2.1 **கல்வித் தகைமை.**- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தின் நீதித்துறை சார்ந்த வழக்கறிஞர் பட்டம் பெற்றிருத்தல் அல்லது சிரேஷ்ட நீதித்துறை வழக்கறிஞராக சத்தியப் பிரமானம் செய்திருத்தல்.

2.2 **அனுபவம்.**- ஏற்புடையதன்று, எனினும் தகைமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையில் அனுபவத்துக்காக புள்ளி வழங்கப்படும். (எழுத்து மூலமாக உறுதிப்படுத்தவும்).

2.3 **உடல் சார்ந்த தகைமை.**- தேர்ந்தெடுக்கப்படும் சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் அரச கடமையை முன்னெடுத்துச் செல்வதற்கும் உடல், மனோ ரீதியாக சிறந்த தகைமைளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2.4 **வயது.**-

2.4.1 குறைந்த எல்லை - 21 வயதுக்குக் குறையாது.
2.4.2 ஆகக் கூடிய எல்லை - 35 வயதுக்கு மேற்படாது இருத்தல்.

2.5 **ஏனையவை.**-

2.5.1 இலங்கைப் பிரசையாக இருத்தல்.
2.5.2 விண்ணப்பதாரி சிறந்த நற்பண்புள்ளவராகவும் சிறந்த தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
2.5.3 இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான 2.1 இலிருந்து 2.4 வரையான தகைமைகளை விண்ணப்பம் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு சகல விண்ணப்பதாரிகளும் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனை மற்றும் சேவை நிபந்தனை**

3.1 இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். (ஓய்வூதியம் சம்பந்தமாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் வழங்கப்படும் கொள்கைத் தீர்மானத்துக்கு அமைதல் வேண்டும்.)

3.2 மூன்று (3) வருட கால தகுதிகாண் நிலையை கொண்டது.

3.3 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி நாட்டிற்குள் குறிப்பிடப்படும் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுதல் வேண்டும்.

3.4 மொழித் திறன்.

3.4.1 அரசகரும மொழித் திறன்
ஆங்கில மொழியிலான சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட அலுவலர் ஒருவர் தகுதிகாண் காலத்துக்குள் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் திறன் பெறுதல் வேண்டும். இந்த திறமை மட்டமாவது க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்கள/ தமிழ் மொழி பிரதான பாடமாக சித்தியடைதல் (இரண்டாவது மொழி அல்லது மாற்றுப் பாடமாக அல்ல) மற்றும் அரசகரும மொழி திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட விசேட திறமைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

3.4.2 ஏனைய அரச மொழித் திறன்

| திறமை பெற வேண்டிய கால எல்லை | திறமை பெற வேண்டிய திறமை மட்டம் | மொழித் திறன் | |
|---|---|---|---|
| சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஐந்து (05) வருடங்களுக்குள் | அரசாங்க சேவை சுற்றறிக்கை இல. 07/2007 மற்றும் அதற்கு இணைந்த சுற்றறிக்கைக்கு அமைய சம்பந்தப்பட்ட மட்ட மொழித் திறன் பெற்றிருத்தல் வேண்டும் | சிங்களம் | தமிழ் |
| | | தமிழ் | சிங்களம் |
| | | ஆங்கிலம் | ஆலோசனை இல. 3.4.1 இன் கீழ் தகைமை பெற்ற அரச கரும மொழியைவிட ஏனைய அரச கரும மொழி. |

4. **மாதாந்த சம்பளத் தொகுதியும் திட்டமும்**
பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 இன் சம்பள குறியீட்டு MN - 4 - 2016 இற்கு அமைய இந்த பதவிக்கு ரூபா 31,490 - 10×445 - 11×660 -10×730 - 5×750 ரூபா 54,250 மாதாந்த சம்பளத் திட்டமாகும். (இந்த சம்பளம் வழங்கப்படுவது 2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 இன் விதிமுறைகளுக்கு அமைவாக அதன் அட்டவணையின் II இல் குறிப்பிடப்பட்டவாறாகும்).

5. **திறனை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.**

**கருத்துக்கள் :-**

5.1 தகுதி பெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து தகைமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையில் காணப்படும் ஆற்றலின் தொடர் வரிசைக் கிரமத்தில் சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமமாக நேர்முகப் பரீட்சையில் தோற்றும் தகைமையுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

5.2 விண்ணப்பதாரிகளில் ஒருவருக்கு மேற்பட்டவர்கள் சமமான புள்ளிகள் பெற்றிருப்பின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் பொருத்தமான தீர்மானம் எடுப்பது நியமன அலுவலரான பணிப்பாளர் நாயகமாகிய என்னால் தீர்மானிக்கப்படும். அத்துடன் அது இறுதித் தீர்மானமாக இருக்கும்.

5.3 தகைமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையில் கீழ்க்குறிப்பிடப்படும் புள்ளிகளின் விதிமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

| பரிசோதனை செய்து புள்ளிகள் வழங்கும் துறை | ஆகக் கூடிய புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்கு கவனம் செலுத்தும் குறைந்த பட்ச புள்ளிகள் அளவு |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமை * | 20 | ஏற்புடையதன்று |
| மேலதிக தொழில் தகைமை * | 15 | |
| அனுபவம் * | 30 | |
| மொழித் திறன் * | 15 | |
| தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான அறிவு * | 15 | |
| நேர்முகப் பரீட்சையில் இனம் காணப்படும் தகுதிகள் * | 05 | |
| மொத்தம் | 100 | |

* மேற்குறித்த தகைமைகள் ஆவணங்களின் மூலமாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

6. **விண்ணப்பதாரரின் தனித்தன்மை**

6.1 திறணை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்கள் சகல விடயங்களையும் முழுமையாக விண்ணப்பப் படிவத்தில் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே.

6.2 நேர்முகப் பரீட்சையில் சகல சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் மற்றும் முறையாக உறுதி செய்யப்பட்ட அதன் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.3 நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரர்கள் தம்மை உறுதிப்படுத்த கீழ்க் குறிப்பிடப்படும் சான்றுப் பத்திரங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

6.3.1 ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை.

6.3.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

6.3.3 செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

7. **விண்ணப்பிக்கும் முறை**

7.1 விண்ணப்பப் படிவம் அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமைய A4 அளவிளான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி, முதல் பக்கத்தில் இல. 01 லிருந்து 06 வரையும், இரண்டாவது பக்கத்தில் 07 லிருந்து 09 வரையும் மூன்றாவது பக்கத்தில் 10 லிருந்து 11 வரையும் வரக்கூடியவாறு படிவம் தயாரிக்கப்பட்டு அதில் தமது கையெழுத்தினால் தெளிவாக நிரப்புதல் வேண்டும். மாதிரிப் படிவத்தின்படி அமையாத விண்ணப்பங்கள் மற்றும் பிழையான தகவல்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமாக அமையும்).

7.2 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை "பணிப்பாளர் நாயகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், த.பெ. இல. 556, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்குக் கிடைக்கும் பொருட்டு 2019.06.28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலமாக அனுப்பலாம். அல்லது கொண்டு வந்து நேரடியாகவோ கையளிக்க முடியும். விண்ணப்பத்தை உள்ளடக்கியிருக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்துக்கு சட்ட உதவியாளர் பதவிக்கு ஆட் சேர்த்துக் கொள்ளல் - 2019" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். குறித்த தினத்துக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் விண்ணப்பம் தபாலில் தொலைந்து விட்டது அல்லது தாமதமாகிவிட்டது போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

7.3 விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரின் கையெழுத்தை அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவர்/சமாதான நீதவான் ஒருவர்/சத்திய ஆணையாளர் ஒருவர்/சட்டத்தரணி ஒருவர்/ பிரசித்த நொத்தாரிஸ் ஒருவர்/ முப்படை அதிகாரி மட்டத்திலுள்ள அலுவலர் ஒருவர் அல்லது ரூபா 47,615 மாதாந்த ஒருங்கிணைந்த சம்பளத்தைப் பெறும் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலர் ஒருவரினால் உறுதி செய்யப்படல் வேண்டும்.

8. **பொய்யான தகவல்களை வழங்குதல்**

எவரேனும் விண்ணப்பதாரர் ஒருவர் தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனும் தகவல் பொய்யானது அல்லது பிழையானது என்பதாக ஆட்சேர்ப்பதற்கு முன்னர் கண்டு பிடித்தால் அவரின் அபேட்சகத் தன்மை செல்லுபடியற்றதாக்கப்படும். பொய்யானது அல்லது பிழையானது என்பதாகவோ ஆட்சேர்த்த பின்னர் தரப்பப்பட்ட தகவல்களில், ஏதேனும் முக்கிய விபரங்களை தன்னிச்சையாக மறைத்திருந்ததாக தெரியவரின் அவர் சட்டரீதியாக அரசாங்க சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

* இந்த அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளுக்கிடையில் யாதேனும் வேறுபாடுகள் ஏற்படின் சிங்கள மொழி உரையே மேலான்மையாக இருக்கும்.

பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,
பணிப்பாளர் நாயகம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள
முகாமைத்துவ திணைக்களம்.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் சார்ந்த அலுவலர் சேவைத் தொகையின் சட்ட உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளல் - 2019**

(அலுவலகப் பாவனைக்கு மட்டும்) [ ]

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :- திரு./திருமதி/செல்வி : ..........................................................................

..........................................................................

தமிழில் :

..........................................................................

..........................................................................

ஆங்கிலத்தில் :

..........................................................................

..........................................................................

1.1 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்தில்) :

தமிழில் :

..........................................................................

..........................................................................

ஆங்கிலத்தில் :

..........................................................................

..........................................................................

02. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.

03. பிறந்த திகதி :

ஆண்டு : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

04. பால் : (ஆண்/பெண் நிலை) :- பெண் - 1 ஆண் - 0 [ ]

(உரிய எழுத்தைப் பெட்டிக்குள் குறிப்பிடவும்.)

05. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்தில்):

..........................................................................

..........................................................................

06. தொலைபேசி இல. : நிலையான :-----. கையடக்க :-----.

07. கல்வித் தகைமை :

7.1 க.பொ.த. (உ. த.) பரீட்சை சம்பந்தமான விபரம்

i. பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :-----.

ii. பரீட்சை சுட்டெண் :-----.

iii. சித்தியடைந்த பாடங்கள் :-----.

| பாடம் | பெற்ற தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

7.2 பதவிக்கு பொருத்தமான தகைமைகள் :

| சம்பந்தப்பட்ட தகைமைகள் | தகைமை வழங்கிய நிறுவனம் | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|
| | | |
| | | |

7.3 மேலதிக தகைமைகள் :- ..............................................................................................................................
..............................................................................................................................

08. நீர் ஏதேனும் குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டுள்ளீரா?: ஆம்/ இல்லை

8.1 ஆம் எனின் அது பற்றிய விபரத்தைக் குறிப்பிடுக :-
..............................................................................................................................
..............................................................................................................................

09. தகவல் அறிந்து கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்கள் :-

(1) பெயர் :-
பதவி :-
முகவரி :-

தொ.பே.இல. :-

(2) பெயர் :-
பதவி :-
முகவரி :-

தொ.பே.இல. :-

10. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட தகவல்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையுமென இத்தால் உறுதி கூறுகிறேன்.

(ஆ) என்னால் இங்கு தரப்பட்டுள்ள இந்த விபரங்களில் எவையேனும் பிழையானவை என தெரியவரின் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கு தகுதியற்றவன் எனவும், மற்றும் நியமனத்தின் பின்னராயின் எவ்வித நட்டஈடும் இன்றி பதவி இழக்கச் செய்வதற்கும் ஆளாவேன் என்பதை நான் நன்கு அறிவேன்.

(இ) இதில் தரப்பட்டுள்ள விடயங்களில் பின்னர் மாற்றம் செய்ய முடியாது.

-------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

11. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இங்கு விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி ........................................... எனும் பெயருடையவர் எனக்கு தனிப்பட்ட முறையில் நன்கு தெரிந்தவர் எனவும், இவர் .................................... ஆந் திகதி எனது முன்னிலையில் மேற்படி 10 வது பந்தியின் கீழ் கையொப்பமிட்டார் என உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
(பதவி முத்திரை இடவும்)
திகதி :-----.

6-235

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தொழில்நுட்பவியல் நிறுவகம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கான அனுமதி – 2019/ 2020

தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்படும் மூன்று (03) வருடகால முழுநேர தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவுசெய்வதற்காக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரி களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக்கற்கை நெறியானது, தியகம, ஹோமாகமவில் அமைந்துள்ள தொழில் நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்தப்படும்.

1. **பொதுவானவை**.- தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கைநெறியானது, இரண்டு வருட முழுநேர கற்றலையும், ஒரு வருட தொழிற்பயிற்சியையும் உள்ளடக்கியது. இதன் கற்கைமொழி ஆங்கிலம் ஆகும். கற்கைநெறிகள் பின்வரும் கற்கைத்துறைகளில் வழங்கப்படுகின்றது :-

*(அ) கடல்சார் கற்கைநெறி (வகை I) :*

(i) கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம் ;
(ii) கப்பற்றுறை கல்வியும் தொழில்நுட்பமும்.

*(ஆ) ஏனைய கற்கைநெறிகள் (வகை II) :*

(i) இரசாயன பொறியியல் தொழில்நுட்பம் ;
(ii) குடிசார் பொறியியல் தொழில்நுட்பம் ;
(iii) மின்சார பொறியியல் தொழில்நுட்பம் ;
(iv) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் தொழில்நுட்பம் ;
(v) தகவல் தொழில்நுட்பம் ;
(vi) இயந்திரவியல் பொறியியல் தொழில்நுட்பம் ;
(vii) பல்பகுதிய தொழில்நுட்பம் ;
(viii) புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம்.

2. **தகைமைகள்** :

2.1 *வயது மற்றும் தகைமைகள்:*

(அ) விண்ணப்பதாரிகள், 31.12.2018 ஆந் திகதி யன்று 24 வயதிற்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) 31.12.2018 இல் 20 வயதிற்குக் குறைந்த விண்ணப்பதாரர்களுக்குக் கப்பற்துறைக் கல்வியும் தொழில்நுட்பமும், கடல்சார் பொறி யியல் தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகளுக் கான அனுமதிக்கு முன்னுரிமை வழங்கப்படும். கடல்சார் கற்கைநெறி (வகை 1) இற்கான விண்ணப்பதாரிகள் மருத்துவ பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றுக்கு விசேடமாக தோற்றுதல் வேண்டும் ;

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ்வரும் ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர்கல்வி நிறுவனத்திலோ முழுநேர கற்கை நெறிக்கு பதிவுசெய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவர்.

2.2 ***கல்வித் தகைமைகள்***.-

(அ) விண்ணப்பதாரிகள் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கீழ்க்குறிப்பிட்டுள்ள பாடங்களில் மூன்றில் (03) சித்திபெற்றிருத்தல் வேண்டும் :-

(i) பௌதிகவியல்
(ii) இரசாயனவியல்
(iii) இணைந்த கணிதம்
(iv) உயர் கணிதம்

அத்துடன், இலங்கை பரீட்சைகள் ஆணையாளரி னால் 2016 அல்லது 2017 அல்லது 2018 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சைகளில் ஒன்றில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஆ) கடல்சார் கற்கைநெறிகள் (வகை 1) இற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் திறமைச் சித்தி (C pass) பெற்றிருக்க வேண்டும்:-

3. **தெரிவு முறைமை**.-

3.1 கற்கைநெறிக்கான அனுமதி.-

அனுமதிக்கான தெரிவானது க. பொ. த. (உ. த.) பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையிலும், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்பவியல் நிறுவனத்தினரால் நடாத்தவிருக்கும் தகுதிகாண் பரீட்சை முடிவுகளிலும் தங்கியிருக்கும்.

தகுதிகாண் பரீட்சையில் சித்தி எய்தியவர்களில், க. பொ. த. (உ.த.) பரீட்சையில் அதிகூடிய பெறுபேற்றையுடையவர்கள், திறமை வரிசையில் தெரிவு செய்யப்படுவர் அதாவது இசற் - மதிப்பீட்டு முறை (Z-Score) அடிப்படையாகக் கொள்ளப்படும். தெரிவு செய்யப்படுபவர்களில், 40% தினர் திறமை அடிப்படையிலும், 60% தினர் மாவட்ட ஒதுக்கீடு முறை அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர்.

3.2 கற்கைத்துறை

கற்கைத் துறைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்கையில் தகுதிகாண் பரீட்சைப் பெறுபேறு, விண்ணப்பதாரியின் கற்கைத்துறை தெரிவு வரிசை என்பன இணைந்து கருத்திற் கொள்ளப்படும்.

4. **விண்ணப்பிக்கும் முறை** :

4.1 *விண்ணப்பப்படிவம் :*

(i) விண்ணப்பப்படிவமானது அரசாங்க வர்த் தமானியில் பிரசுரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவம்போல் தயார்செய்யப்பட வேண்டும். மாதிரி

விண்ணப்பப்படிவத்தை கீழே தரப்பட்ட இணை யத்தள முகவரியிலும் பெற்றுக்கொள்ளலாம் :

http://www.itum.mrt.ac.lk

(ii) விண்ணப்பப்படிவமானது, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "NDT Admission 2019/ 2020" என ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டு, **"உதவிப் பதிவாளர், கல்விசார் மற்றும் மாணவர் விவகாரப் பிரிவு, தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், தியகம, ஹோமாகம** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவமானது விண்ணப்ப முடிவுத் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ "உதவிப் பதிவாளர், தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம்" என்ற முகவரிக்கு வந்தடைதல் வேண்டும்.

(iv) முத்திரை ஒட்டிய (பெறுமதி ரூபா 45.00) 9"×4" கடித உறையில் உங்களது சுயவிலாசத்தை எழுதி விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(v) விண்ணப்பப்படிவமானது பூர்த்தியாக்கப்பட்டு, விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டவாறு உள்ளடக்கப்பட்டவை உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். மூல அல்லது பிரதி ஆவணங்கள் தேவையில்லை (விண்ணப்பப் படிவத்தில் 3 மற்றும் 5 இனைப் பார்க்க.)

4.2 கற்கை நெறிக்கான முன்னுரிமை :

(i) இரண்டு வகை கற்கை நெறிகள் உள்ளன.

(ii) விண்ணப்பதாரிகள் கடல்சார் கற்கைநெறி (வகை I) அல்லது ஏனைய கற்கைநெறி (வகை II) அல்லது இரண்டு கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பிக்கலாம். இரண்டு கற்கைநெறி களுக்கும் விண்ணப்பிக்குமிடத்து உங்கள் விருப்பு தெரிவு வரிசையை தெரியப்படுத்தல் வேண்டும்.

(iii) வகை (I) இல் முதலாவது விருப்பு 1 எனவும் இரண்டாவது விருப்பு 2 எனவும் குறிப்பிடுக. கடல்சார் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் மாத்திரம் இதனை நிரப்புதல் வேண்டும்.

(iv) வகை (II) இல் முதலாவது விருப்பு 1 எனவும் இரண்டாவது விருப்பு 2 என்றவாறு உங்கள் விருப்புகளை (1, 2, 3, 4, 5, 6, 7, 8) எனக் குறிப்பிடுக.

5. (i) **விண்ணப்பக் கட்டணம்**.- ஏதாவதொரு வகை கற்கைநெறிக்கு ரூபா 500.00 (ஐநூறு ரூபா) ரூபாவும், இரண்டு வகைகளுக்கும் சேர்த்து விண்ணப்பிக்க விரும்பினால் ரூபா 700.00 (எழுநூறு ரூபா) ரூபாவும் ஆகும். இதனை ஏதாவதொரு இலங்கை வங்கிக் கிளையில் மட்டும் "தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக் கழகம், இலங்கை வங்கி கட்டுப்பெத்தை கிளையில் உள்ள கணக்கு இல. 0000308280" க்கு செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கவும். விண்ணப்பக்கட்டணம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

(ii) *விண்ணப்ப முடிவுத் திகதி*.- விண்ணப்ப முடிவுத் திகதியானது 2019 ஆம் ஆண்டு ஆடி மாதம் 8 ஆந் திகதி (08.07.2019).

6. **தகுதிகாண் பரீட்சை மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சை**.- ஒவ்வொரு மாவட்டத்திலும், அம் மாவட்டத்திற்குரிய க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேற்றுக்கமைய நிரல்படுத்தப்பட்டு அதிகூடிய பெறுபேற்றையுடைய விண்ணப்பதாரிகளே தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப்பரீட்சை தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும்.

ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்கு தேவையான உசாத்துணை நூல்களை ITUM இணையத்தள முகவரியில் (http://www.itum.mrt.ac.lk) பெற்றுக்கொள்ளலாம்.

7. **பதிவு செய்தல்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்ப தாரிகள் கற்கைநெறிக்குப் பதிவுசெய்வதற்காக பின்வரும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

* க. பொ. த. (உ. த.) சான்றிதழ் ;
* க. பொ. த. (உ. த.) இசற் - மதிப்பீடு (Z - Score) சான்றிதழ்;
* பாடசாலை விலகற் சான்றிதழ் ;
* பிறப்புச் சான்றிதழ்
* சான்றிதழ்கள் அல்லது வேறு ஆவணங்களில் பெயர் மாற்றம் ஏதும் இருப்பின் அது தொடர்பான அத்தாட்சிப்பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

8. **முக்கிய குறிப்புகள்**.-

(i) ஒரு பரீட்சார்த்தி தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கைநெறியினைப் பதிவுசெய்த பின்னர் அக்கற்கைநெறிக் காலத்தின்போது இந்நிறுவகத்திலோ அல்லது இலங்கையின் வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர்கல்வி அமைச்சின்கீழ் பதிவுசெய்யப்பட்ட வேறு எந்தவொரு உயர்கல்வி நிறுவனத்திலோ ஏதாவதொரு கற்கை நெறியையும் பயில்வதற்கு அனுமதி பெறுவதற்குத் தகுதியற்றவராவார்.

(ii) இந் நிறுவகத்திலோ அல்லது வேறு ஏதாவ தொரு பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர்கல்வி நிறுவனத்திலோ பதிவுசெய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப் பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

(iii) விண்ணப்பப்படிவத்தில் உள்ள அனைத்து விபரங் களும் உண்மையாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் உள்ள தகவல்கள் ஏதாவது போலியானதாக அல்லது தவறானதாக அறியப்பட்டால் விண்ணப்பதாரி நிறுவகம் எடுக்கும் எந்தவொரு பொருத்தமான தீர்மானத்திற்கும் உடன்பட வேண்டும்.

தகுதிவாய்ந்த அதிகாரி,
தொழில்நுட்பவியல் நிறுவகம்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

| APPLICATION FOR ADMISSION TO THE NATIONAL DIPLOMA IN TECHNOLOGY COURSE | *For office use only* | | | | |
|---|---|---|---|---|---|
| INSTITUTE OF TECHNOLOGY UNIVERSITY OF MORATUWA | Application No. | | | | |
| ACADEMIC YEAR - 2019/2020 | District | | | | |

Application for (Please ✓ )

1. Maritime Fields - SET 1 ☐
2. Other Fields - SET 2 ☐

[Applicants may apply for single set (Set 1 or Set 2) or both sets (Set 1 and Set 2)]

1. Personal Details : (Please use **BLOCK CAPITALS**)

Name in Full

(Leave one blank cage between names)

Name with Initials :

(Leave one blank cage between name)

| Nationality ▸ | | | Sex ▸ | Male/Female | | |
|---|---|---|---|---|---|---|
| Age<br>As at 31st Dec. 2018 | (Years) | (Months) | Date of Birth | Date | Month | Year |
| National ID Number | | | | | | |

2. Contact Details :

Address (Residence):

(Leave one blank cage between different segments of the address)

| Telephone | | Mobile | |
|---|---|---|---|
| E-mail (if available) | | | |

3. Results of G. C. E. (Advanced Level) Examination :

| *Subjects & Details of Examination* | *Grades & Details obtained at the* | | |
|---|---|---|---|
| | *1st Attempt* | *2nd Attempt* | *3rd Attempt* |
| Year | | | |
| Physics | | | |
| Chemistry | | | |
| Combined Mathematics | | | |
| Advanced Mathematics | | | |
| Index Number | | | |
| Z-Score | . | . | . |
| Please Indicate if your Z-Score is minus (M) | | | |
| Results of the year to be considered for Selection (indicate whether 2016 or 2017 or 2018) ▶ | | | |

4. Medium :

| | |
|---|---|
| Medium in which you wish to sit the Aptitude Test | ☐ Sinhala ☐ English ☐ Tamil |

5. School(s) attended from Year 11 to Year 13 :

| *Year* | | *Name & Address of School* | *District* | *Period of Attendance* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | *From* | | | *To* | | |
| | | | | *Year* | *M* | *D* | *Year* | *M* | *D* |
| 11 | | | | | | | | | |
| 12 | | | | | | | | | |
| 13 | 1st Attempt | | | | | | | | |
| | 2nd Attempt | | | | | | | | |
| | 3rd Attempt | | | | | | | | |

6. Certification of Results and Schools attended :

It is compulsory to certify the results under No. 3 and details under No. 5 in the application by the School Principal for the School Candidates and by a Justice of Peace for External Candidates.

I certify that the particulars given above by the candidate in the Cage No.3 and No. 5 are true and accurate according to the Original Certificates.

Name of the Principal/Justice of the Peace :
Rev./Dr./Mr./Mrs. ..............................................................

Official Seal

...................................... .....................
Signature Date

7. Field Preference :

SET 1 - Insert order of preference as 1 for First preference and 2 for Second preference. This should be completed only by the candidates who have applied for Maritime Studies.

SET 2 - Insert order of preference as 1, 2, 3, 4, 5, 6, 7, 8. '1' for the "Most Preferred", '2' for the next and so on '8' for the last preferred.

| *SET 1* | | *SET 2* | |
|---|---|---|---|
| *MARITIME FIELDS* | *ORDER* | *OTHER FIELDS* | *ORDER* |
| Marine Engineering Technology | | Chemical Engineering Technology | |
| Nautical Studies and Technology | | Civil Engineering Technology | |
| | | Electrical Engineering Technology | |
| | | Electronic and Telecommunication Engineering Technology | |
| | | Information Technology | |
| State Priority, if applied for both sets – ✓ | | Mechanical Engineering Technology | |
| SET 1 | | Polymer Technology | |
| SET 2 | | Textile & Clothing Technology | |

| | Yes | No |
|---|---|---|
| Are you registered as a fulltime student in any other University under the UGC (other than Open University) or any other Higher Educational Institution under the Ministry of Higher Education ? (Delete whatever is inapplicable) | Yes | No |

*APPLICANT'S DECLARATION :*

1. I certify that all the particulars given by me in this Application are true and accurate. I am aware that if the particulars given by me in this Application are found to be false or inaccurate, I will be discontinued from the course at any time.

2. I declare that I am not a fulltime registered student at any University (except Open University of Sri Lanka) or any Higher Educational Institution under the Ministry of Higher Education.

3. I am aware that if I am found to be registered in another University or any other Higher Educational Institution under the Ministry of Higher Education at the time of sitting for the Aptitude Test for the National Diploma in Technology Course, I will not be selected for the Course.

4. In the event of my being selected for admission after the Test, I shall abide by Statutes, By-Laws, Regulations and the Rules of the Institute of Technology, University of Moratuwa in so far as they are applicable to me.

5. I have pasted the cash deposit/ cash transfer receipt obtained from Bank of Ceylon, drawn in favour of "Institute of Technology, University of Moratuwa - Account No. 0000308280 of Bank of Ceylon, Homagama Branch".

6. I also enclose a self addressed stamped envelope (Rs. 45 worth) in size 9" x 4".

————————,
Signature of Applicant.

Date :————.

Paste your Cash Deposit/Cash Transfer Original Slip here.

06–123

---

**மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு**

வன பரிபாலனத் திணைக்களம்

**வன பரிபாலனத் திணைக்களத்திலுள்ள வன வெளிக்கள உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019**

*2019.04.05 ஆந் திகதி 2118 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மற்றும் 2019.05.10 ஆந் திகதி 2123 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையுடன் தொடர்புபட்டது.*

*2. இதற்கமைய அந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரங்கள் பொறுப்பேற்கும் இறுதித் தினம் 2019.06.14 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

டபிள்யூ. ஏ. சீ. வேரகொட,
காடு பேணுநர் தலைமையதிபதி.

வன பரிபாலனத் திணைக்களம்,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2019, மே 30.

06-354

---

**காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு**

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்பமட்ட- பகுதிதேர்ச்சி பெற்ற சேவைத் தொகுதியில் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - நில அளவைக் கள உதவியாளர்கள்

*இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தில் அளவையிடல் உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் பதவிகளின் எண்ணிக்கை 290 என்று குறிப்பிடுதல் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2019.06.19 ஆந் திகதி வரை நீடிப்பதற்கு 2019.05.24 ஆந் திகதிய மற்றும் 2,125 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பினை திருத்தம் செய்து வெளியிடுகின்றேன்.*

1.0 நிலஅளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்பமட்ட- பகுதி தேர்ச்சி பெற்ற சேவைத் தொகுதியில் (PL02-2016) நில அளவைக் கள உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1

| ஆட்சேர்ப்புக்கான பதவி | ஆட்சேர்ப்புத் தரம் | வெற்றிடமாகவுள்ள பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| நில அளவைக்கள உதவியாளர் | தரம் III | 290 |

1.2 **பதவிக்கான கடமைகளின் தன்மை**

| பதவிப் பெயர் | முக்கிய அலுவல்கள் |
|---|---|
| நில அளவைக் கள உதவியாளர் | • அளவை தொடர்பான பரு வரைபடம் கீற உதவுதல்.<br>• அளவைப்புலப் புத்தகங்கள் மற்றும் கிடைப்படங்களைப் பயன்படுத்தி பழைய எல்லைகளை அவதானிப்பதற்கு ஏதுவாக அளவைக் கோடுகளை தயாரித்தல்.<br>• அளவை தொடர்பான புலத்தில் முளைகளையும் எல்லைக் கற்களையும் திறந்து, நிறுவி அளவைக்காக தயார்ப்படுத்தல்.<br>• நிலஅளவை தொடர்பான பீடக்குறிகளை இனங்காணவும் நிறுவவும் அளவையில் நிலஅளவையாளர்களுக்கு உதவுதல்.<br>• களத்தில் அளவைக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களை பேணவும், களஞ்சியப்படுத்தவும் உரிய பராமரிப்பு பணிகளில் உதவுதல்.<br>• தியோடோலைட்டுக்கள், மட்டங்கள் மற்றும் புதிய இலத்திரனியல் பூரணமாணிகள் அடங்கலாகச் செய்மதித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அளவைகளுக்கு களத்தில் அளவைப் புள்ளிகளில் புவிசார் இடமறியும் முறைமை (GPS) உபகரணங்களை நிலைநாட்டல். |
| | • வான் ஒளிப்படப்பிடிப்புக்குத் தேவையான புவிபார்த்த பார்வைப் புள்ளிகளை அமைப்பது தொடர்பான சகல கடமைகளிலும் உதவுதல்.<br>• அளவைத்தரவுகளை சேகரிக்கவும் அளவைகளில் தெரிவுசெய்யப்பட்ட எல்லா இடங்களின் மையங்களையும் மட்டங்களையும் தீர்மானிப்பதற்கு தேவையான இலக்குகளையும் அட்டவணைகளையும் முறையாகப் பேண உதவுதல்.<br>• அளவை நடவடிக்கைகளில் சரியான தரவுகளைப் பயன்படுத்தி களத்தில் எல்லைக் கற்களையும் பீடக்குறிகளையும் நிறுவுதல்.<br>• புலவேலைப் புத்தகம் மற்றும் சுவடு வரைதல்களையும் பயன்படுத்தி பூர்வாங்க நடவடிக்கையாக காணித்துண்டுகளின் எல்லைக் குறியீடுகளை நிர்ணயிக்க உதவுதல்<br>• நிலஅளவையாளர் நாயகம் அல்லது அவரது பிரதிநிதியினால் ஒப்படைக்கப்படும் நிலஅளவைதொடர்பான எந்தவொரு கடமையிலும் ஈடுபடுதல்.<br>• நிலஅளவை களஉதவியாளர் தரத்தில் ஓவசியர் பதவி வகிப்போருக்கு மேற்குறித்த கடமைகளுக்கு மேலதிகமாக ஏனைய நிலஅளவை கள உதவியாளரின் பணிகளை மேற்பார்வை செய்தலும் பொறுப்பாகும். |

2.0 நியமிக்கப்படுவோர் தொகையும், நியமனத் திகதியும் நியமிப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையுமோ அல்லது அதில் ஏதேனுமொரு தொகையை நிரப்பாமலிருக்கவோ நியமிப்பு அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3.0 **சம்பளம் :-**

இலக்கம் 03/2016 மற்றும் 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்று நிரூபத்திற்கு இணங்க நிலஅளவை வெளிக்கள உதவியாளர் சேவையின் III, II, I மற்றும் விசேட தரங்களுக்கான உரிய மாதாந்த சம்பளப் படிமுறை

ரூபா 25,250 - 10x270 -10x300 – 10 x 330 x 12 x 350 - ரூபா 38,450 ஆக இருப்பதுடன் இந்தச் சம்பளம் தங்களுக்கு உரித்துடையதாக ஆவது. 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் ஆகும். மேற்குறிப்பிடப்பட்ட சுற்றுநிரூபத்தின் உப அட்டவணை II ஒழுங்கு விதிப் பிரகாரம் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி முதல் சம்பளம் வழங்கப்படும்.

4.0 இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பரீட்சையில் நிலஅளவை வெளிக்கள உதவியாளர் சேவையில் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படும் அலுவலருக்கு உரித்தான ஓய்வூதியம், ஓய்வூதிய முறைமை தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்படும் தொழில்சார் தீர்மானங்களுக்கு இணங்க தீர்மானிக்கப்படும். இந்த நியமனம் 03 மூன்று வருடகால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டிருப்பதுடன் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை ஆற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் ஆரம்பத்தில் உள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு உரியதான பொதுவான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

5.0 **தகைமைகள்.-**

5.1 **கல்வித் தகைமைகள்:**

(அ) கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.2 **தொழில்சார் தகைமைகள்**

நில அளவைக் கள உதவியாளர் பதவிக்குரிய மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழிற் பயிற்சித் தகைமையில் (NVQ) குறைந்த பட்சம் இரண்டாவது மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

5.3 **ஆகக் குறைந்த நிபுணத்துவம்**

(அ) நில அளவைக் களத்தை இனங்காண உதவுதல்

(ஆ) அளவை உபகரணங்களையும், கருவிகளையும் பாதுகாத்தலும் பராமரித்தலும்

5.4 **உடல் சார் தகைமைகள்**

சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல், உள ரீதியான தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5.5 **ஏனையவை**

(i) ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தேவையான தகைமைகள் அனைத்தையும், விண்ணப்பம் கோரப்பட்டுள்ள இறுதித் திகதியன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5.6 **வயது**

விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிப்பவர்களிற்கு இவ்வுயர் வயதெல்லை ஏற்புடையதல்ல)

6.0 **பிழையான தகவல்கள்.-**

இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு யாதேனுமொரு விண்ணப்பதாரருக்கு தகைமையில்லையெனத் தெரியவரின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னராயினும் விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் ஒரு தகவலை அது பிழையெனத் தெரிந்து கொண்டு சமர்ப்பித்திருந்தாலோ அல்லது ஏதேனும் தகவலை வேண்டுமென்றே மறைத்திருப்பது கண்டறியப்பட்டால் அவர் அரசாங்க சேவையில் இருந்து நீக்கப்படலாம்.

7.0 **ஆட் சேர்ப்பு முறை :** எழுத்துப்பரீட்சை மற்றும் தகைமைகளைப் பரிசீலனை செய்யும் நேர்முகப் பரீட்சை மூலம்

***பரீட்சைப் பாடத்திட்டம்***

இப் பரீட்சை இரண்டு பாடங்கள் கொண்டதோர் எழுத்து மூலப் பரீட்சை ஆகும். இப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடத்தப்படுவதுடன் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| பாடம் | பெறக்கூடிய முழுப்புள்ளிகளின் அளவு | சித்தியெய்த பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளின் வீதம் | காலம் |
|---|---|---|---|
| 1 . பொது அறிவு | 100 | 40% | 2 மணித்தியாலம் |
| 2. நுண்ணறிவு | 100 | 40% | 1 மணித்தியாலமும் 15 நிமிடமும் |

7.1 **பாட விதானம்**

(i) *பொது அறிவு:-* இவ் வினாத்தாள் விண்ணப்பதாரர் தாம் வதியும் சுற்றாடல் உட்பட இலங்கையின் அரசியல், சமூக, கலாசார, சமய, பொருளாதார பின்னணியுடன், விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் சர்வதேச ரீதியாக முக்கியமான பொது விடயங்கள் தொடர்பாகப் பெற்றுள்ள அறிவைப் பரிசோதிப்பதாக அமையும்.

(ii) *நுண்ணறிவு:-* இது விண்ணப்பதாரரின் சிந்திக்கும் ஆற்றல், அலசி ஆராயும் தன்மை, சமயோசிதமாக தீர்மானமெடுக்கும் திறமை போன்றவற்றை அளவிடும் பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கிய ஒரு வினாத்தாளாகும்.

8.0 **தெரிவு முறை.-**

8.1 நில அளவையாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைச் சபையினால் விண்ணப்பதாரர்களின் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களை பரிசோத்னை செய்யும் பொருட்டு மட்டும் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு பின்னர் எழுத்துப்பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பெற்ற புள்ளிகளின் திறமையின் ஒழுங்கில் மட்டும் தரம் iii இற்கான நில அளவைக் கள உதவியாளர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்

வெற்றிடங்களின் எண்ணிக்கைப்படி நில அளவையாளரினால் தீர்மானிக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையை தகைமைகளை பரிசோதனை செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

சேர்த்துக் கொள்ளப்படும் நில அளவைக் கள உதவியாளர்களிற்கு ஒரு மாத கால கள மற்றும் கோட்பாட்டுப் பயிற்சி நில அளவைத் திணைக்கள பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்படும்.

9.0 **விண்ணப்பப்படிவங்களை தயாரித்தலும் சமர்ப்பித்தலும்.-**

(அ) இவ் அறிவித்தலின் முடிவில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப 21x29cm (A4) அளவுத்தாளில் இரு பக்கங்களையும் பாவித்து விண்ணப்பதாரிகள் தாமாகவே விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். இல. 01 முதல் 06 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும் இல. 07 முதல் இல. 09.2 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் இல. 10 முதல் 14 வரையான தலைப்புக்கள் மூன்றாம் பக்கத்திலும் இல. 15 முதல் 16.2 வரையான தலைப்புக்கள் நான்காம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) தற்போது அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையின் கீழ் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் அவற்றை தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாகவும் உரிய தினத்திற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்கள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஈ) உரிய மாதிரி விண்ணப்பத்திற்கு ஏற்ப அமையாத, உரிய தினத்திற்கு முன் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாமல் குறைபாடுகளுடன் கூடிய விண்ணப்பங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பங்களை நிரப்பாமையினால் நிகழும் பிரதிபலன்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலுடன் காணப்படும் விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திருக்கிறதா என விண்ணப்பதாரர் பரிசீலித்தல் வேண்டும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(உ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதென அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பில் செய்யப்படும் எதுவித முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

9.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதிக்கு வர்த்தமானி அறிவித்தலின்படி 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளால் பூரணப்படுத்தியவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கலாம். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி 2019.06.19 அன்றோ அத்தினத்திற்கு முன்னரோ விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற நில அளவையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதியட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் இப் பரீட்சைக்கு தோற்றவோ அல்லது இப் பதவிக்கான தகைமையுள்ளவர் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவோ கருதப்படக்கூடாது.

9.2 விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆரம்ப மட்டப் பகுதி தேர்ச்சி பெற்ற சேவைத் தொகுதியின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு - நில அளவைக் கள உதவியாளர்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

9.3 விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான்,சத்தியப்பிரமாண ஆணையாளர்,நொத்தாரிசு,முப்படைகளிலும் ஆணையிடும் தரத்திலுள்ள அதிகாரிகள், பொலிஸ்சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு பதவியை கொண்டுள்ள உத்தியோகத்தர், அல்லது அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 03/2016 இன் தரப்படுத்தலுக்கு அமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டங்களில் உள்ள ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோரில் எவரேனும் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

10. **பரீட்சைக்கட்டணம் .-**

பரீட்சைக் கட்டணம் ரூபா 800 ஆகும். இத்தொகையைக் கொழும்பு-05 கிருல வீதி, இல 150 இல் அமைந்துள்ள நில அளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலுள்ள காசாளர் பிரிவில் அல்லது எந்தவொரு மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலோ அல்லது தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும் (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை எதிர்காலத் தேவைக்காக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்). எக்காரணம் கொண்டும் பரீட்சைக்கட்டணம் மீளச்செலுத்தப்படமாட்டாது என்பதுடன் காசுக்கட்டளை அல்லது காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டு இன்றி சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்.-**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2019.06.19 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பரீட்சை)
நில அளவைத் திணைக்களம்
கொழும்பு - 05

12. **பரீட்சைக்குத் தோற்றுதல்.-**

பரீட்சைக்குத் தோற்றும் ஒரு பரீட்சார்த்தி அப்பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது. ஒரு பரீட்சார்த்தி தமக்கென குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

13. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.-**

பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரம் தொடர்பாகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும் இதற்கென பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை;

(ii) அஞ்சல் மா அதிபரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அஞ்சல் அடையாள அட்டை;

(iii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

14. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயமிருப்பின் அது குறித்து நில அளவையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைப்பிரகாரம் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானியில் காணப்படும் பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கு அமைவாக நடந்துகொள்ளக் கட்டுப்பட்டுள்ளனர்.

15. 2,125 ஆம் இலக்க மற்றும் 2019.05.24 ஆந் திகதிய வர்த்தமானி அறிவிப்புப்படி விண்ணப்பங்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் அவசியமல்ல என்பதையும் அறியத் தருகின்றேன்.

எஸ். எம். பீ. பீ. சங்கக்கார,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
கொழும்பு - 05,
2019, யூன் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி அமைச்சு**

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்பமட்ட- பகுதி தேர்ச்சி பெற்ற (PL 02-2016 ) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு - நில அளவைக் கள உதவியாளர்

1.0 பரீட்சை இலக்கம்: [ ]
(அலுவலகப் பயன்பாட்டுக்கு மாத்திரம்)

2.0 பரீட்சைக்கு தோற்றுகின்ற மொழிமூலம் :- [ ]
( சிங்களம் -S, தமிழ் -T, ஆங்கிலம் -E )
(தரப்பட்ட கூட்டில் உரிய குறியீட்டை /இலக்கத்தை இடவும்)

3.0 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./ திருமதி/ செல்வி)
தமிழில் :------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------.
ஆங்கிலத்தில் :------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------.

3.1 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்)
தமிழில் :------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------.
ஆங்கிலத்தில் :------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------.

4.0 தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.

5.0 பிறந்த திகதி:
ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

5.1 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது:

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

6.0 பால் :- (ஆண்-M, பெண்-F) [ ]
(தரப்பட்ட கூட்டில் குறியீட்டை /இலக்கத்தை இடவும்)

7.0 நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்)

தமிழில் :------------------------------------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------------------------------------------.

ஆங்கிலத்தில் :----------------------------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------------------------------------------.

7.1 முகவரி கொடுக்கப்பட்ட நிர்வாக மாவட்டம் :----.
(அட்டவணை 1 ஐப் பார்க்கவும்)

மாவட்ட இலக்கம் [ ] மாவட்டத்தின் பெயர் [ ]

7.2 எப்போதிலிருந்து அம் மாவட்டத்தில் வசிக்கின்றீர்கள்? :----.

8.0 தொலைபேசி இலக்கம் (நிரந்தர) :----. கையடக்கத் தொலைபேசி இல. :----.

9.0 கல்வித் தகைமைகள்:

9.1 க.பொ.த (சா.த) பரீட்சை பற்றிய விபரங்கள்:-

முதலாவது அமர்வு:

I. பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.

II. சுட்டிலக்கம் :----.

III. சித்தியெய்திய பாடங்கள் :----.

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

9.2 க.பொ.த (சா.த) பரீட்சை பற்றிய விபரங்கள்

இரண்டாவது அமர்வு:

i. பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :------.

ii. சுட்டிலக்கம்:------.

iii. சித்தியெய்திய பாடங்கள் :------.

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

10.0. தொழில்சார் தகைமைகள்:- (பெற்றுள்ள NVQ தகைமைகள் பற்றிய விபரங்களைக் குறிப்பிடவும்.)

------------------------------------------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------------------------------------------

11.0. ஏனைய தகைமைகள் ------------------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------------------------------------------

12.0. குற்றச் செயலொன்றிற்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா?

ஆம் ☐ இல்லை ☐

12.1 ஆம் எனின், அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக?

------------------------------------------------------------------------------------------------

13.0 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள்:-

i. பரீட்சைக்கட்டணம் செலுத்திய அலுவலகம் :-----.

ii. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :-----.

iii. செலுத்திய தொகை :-----.

| பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும். |
|---|

14.0 விண்ணப்பதாரரின் உறுதியுரை :

அ. இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மை யானதும், சரியானதும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

ஆ. என்னால் செய்யப்பட்டுள்ள இப்பிரகடனம் பொய்யானதென உறுதியாகுமிடத்து நான் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் பெற்றபின் அவ்வாறு உறுதியாகுமிடத்து சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

இ. ரூபா.................செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டு உரிய இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

ஈ. மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பான நிலஅளவையாளர் நாயகத்தின் விதிகளுக்கும் சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்படுவதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

உ. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விபரத்தையும் பின்னர் மாற்றமாட்டேன்.

------ --------------,

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

15.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி.......................................................................................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிவேன் எனவும் அவர் ..................... ஆந் திகதி என் முன்னிலையில் மேலே 14.0 ஆம் பந்தியின் கீழ் கையொப்பமிட்டாரெனவும் உறுதி செய்கின்றேன்.

------ --------------,

திகதி உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
(பதவி முத்திரையால் சான்றுப்படுத்தவும்)

16.0. திணைக்களத் தலைவரின் சான்றுரை:

(அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

16.1 உத்தியோகத்தரின் சுயவிபரக்கோவைக்கமைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அண்மித்த ஐந்து ஆண்டுகளுக்குள், வேலை, நடத்தை, வரவு திருப்தியானது /திருப்தியற்றது. சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார்/ இல்லை. எந்தவோர் ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை/ உள்ளாகியுள்ளார்.

16.2 விண்ணப்பிப்பவர் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியும் / விடுவிக்கப்பட முடியாது.

திகதி:-----.

-------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

**அட்டவணை 1**

மாதிரி விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இல.07.1 இல் குறிக்கப்படும் முகவரி உரித்தாகும் நிர்வாக மாவட்டம் தொடர்பில் இவ் அட்டவணை தொடர்புடையது.

| நகரம்/மாவட்டம் | நகர/மாவட்ட இலக்கம் |
|---|---|
| 1. கொழும்பு | 01 |
| 2. கம்பஹா | 02 |
| 3. களுத்துறை | 03 |
| 4. கண்டி | 04 |
| 5. மாத்தளை | 05 |
| 6. நுவரெலியா | 06 |
| 7. காலி | 07 |
| 8. மாத்தறை | 08 |
| 9. அம்பாந்தோட்டை | 09 |
| 10. குருநாகல் | 10 |
| 11. புத்தளம் | 11 |
| 12. அநுராதபுரம் | 12 |
| 13. பொலநறுவை | 13 |
| 14. பதுளை | 14 |
| 15. மொணராகலை | 15 |
| 16. இரத்தினபுரி | 16 |
| 17. கேகாலை | 17 |
| 18. அம்பாறை | 18 |
| 19. மட்டக்களப்பு | 19 |
| 20. திருகோணமலை | 20 |
| 21. யாழ்ப்பாணம் | 21 |
| 22. வவுனியா | 22 |

06-585

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை செலவு ரூபா ச. | தபால் ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்**.

**அட்டவணை - 2019**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 07.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.05.2019 |
| | | வெள்ளி | 14.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.05.2019 |
| | | வெள்ளி | 21.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.06.2019 |
| | | வெள்ளி | 28.06.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.06.2019 |
| **யூலை** | .. | வெள்ளி | 05.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.06.2019 |
| | | வெள்ளி | 12.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.06.2019 |
| | | வெள்ளி | 19.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.07.2019 |
| | | வெள்ளி | 26.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.07.2019 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 02.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2019 |
| | | வெள்ளி | 09.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2019 |
| | | வெள்ளி | 16.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2019 |
| | | வெள்ளி | 23.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.08.2019 |
| | | வெள்ளி | 30.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2019 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.